1438

1438

இயேசு பெருமான்

# திருவவதாரக்கீர்த்தனை

M. S. நடராஜ பாகவதர்

பசுமலை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 DEC 1933
MADRAS

Revised & Enlarged.

SAMPATH PRESS,
MADURA,
1933.

Annas 2

Q6:417
N33
76973

இயேசு பெருமான்

# திருவவதாரக்கீர்த்தனை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 DEC 1933
MADRAS

பசுமலை

M. S. நடராஜ பாகவதர்

இயற்றியது.

சங்கை தமிழ்ப்பண்டிதர் J. S. மாசிலாமணி ஐயர்

அவர்களால் பார்வையிடப்பட்டது.

Revised & Enlarged.

ஸம்பத் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

மதுரை.

1933.

விலை ] [ அணா 2.

OFFICE OF THE REGISTRAR OF ...
18 DEC 1933
MADRAS

# FOREWORD

By

OLOF A. JOHANSSON ESQ.,

SECRETARY, KREMMERPURAM Y. M. C. A., MADURA.

It is a great pleasure to me to give an introduction to this piece of work done by Mr. M. S. Nadaraja Bahavadar. The first edition was published last year and is exhausted and this new edition has, therefore, been published.

The author has taken much pains in revising the songs of the first edition and in composing new songs parallel to the Telugu keerthanams.

This book consists of specially and carefully composed lyrics of deep spiritual significance suitable to be used during Christian festivals, and the use of them will certainly inspire and elevate the tone of worship.

I hope that Mr. Nadarajan will be encouraged by the reception to be given by the public to this book which I heartily commend to Tamil friends.

Madura,
19th August, 1933.

*Olof. A. Johansson.*

மதுரை கிரம்மர்புரம் Y. M. C. A. யின் உப காரியதரிசியும்,
மதுரை கோடைகால சங்கீதபாடசாலைக்கும், அரசரடி கிரும
முன்னேற்ற இலாகாவுக்கும், சூப்ரண்டெண்டும்
இரட்சணிய தேவாலய உதவி குருவுமான

சங்கை **R. J.** ஞானவரம் அவர்கள்

பாடிய சாற்றுக் கவி.

வேனிற்கால கோகிலங்கள் விண்டோய் சூதமிருந்து
வானிற்றேவருங் களிக்கப்பாடு மொலியும் வரகு விளை
கானத்தாயர் குழலொழியும் காதுக்கினிமை யெனப் புகல்வர்
ஆனைமலையன்பட்டி நடராஜன் கீதமறியாதார்.

தேனிய பிரசங்க சீர்மை பெற்ற நடராஜன்
கானப்புலவர் களிப்புமிகுங் கீர்த்தனைகள்
மோனை எதுகை குறைவின்றி மொழியும் பொருளும் சிறப்புற்று
வானையுறச் செய்பக்தி வழுத்து மிகவையகத்து.

*அரசரடி,*
15—8—33

**R. J.** ஞானவரம்.

பசுமலை வேத வித்யாசாலை
மதச்சரித்திர உபந்நியாசகரும் தமிழ்ப் பண்டிதருமான
## J. S. மாசிலாமணி ஐயர் அவர்கள்
## சாற்றுக் கவி.

(நிலமண்டில ஆசிரியப்பா).

நீருடை யுடுத்தவிந் நிலவுல கத்துக்
காரெனத் திரண்ட கடும்பவம் நீக்கி
மண்ணுல கனைத்தும் மாண்புறு பரம
விண்ணுல காக்கி விளக்கிட முன்னங்
கொண்ட எண்ணமே குறியாக் கொண்டு
அண்டவர்வாழ் உலகினின் றகன்றுகீ ழிழிந்து
பெத்தலை என்னும் பெயரிய பதியில்
உத்தமி மரியாள் உதரத் துதித்துநன்
கவதரித் தருளிய அண்ணல் சரிதம்
கவினுற யாவரும் கருத்துட் கொளவும்
கற்றவர் நற்றவர் மற்றவர் புகழவும்
நற்றமிழ் பாட்டில் நவின்றுநன் கீந்தனன்
இயலிசை நாடகம் என்னும் முத்தமிழும்
பயலுறும் ஆங்கில பாஷைத் திறனும்
தாளம் இராகம் தவிரா தெழில்கொள்சத்
காலக்ஷேபக் கவிஞர் திறமையும்
பெற்றியா ரிடத்தும் நற்பெயர் பூண்டோன்
யேசு பெருமான் இணையடித் தடத்து நட
ராஜன் என்னும் நாமத்தோனே.

பசுமலை,
ஆகஸ்டு, 1933.

J. S. மாசிலாமணி ஐயர்.

தஞ்சை மகா வித்வான்
வேதநாயக சாஸ்திரியாரது பௌத்திரரும்
சுவிசேஷ கவிப் பிரசங்கியுமாகிய

## ஸ்ரீமான் B. வேதநாயக சாஸ்திரியார் அவர்கள்

## முன்னுரை.

"நர சொரூபமானாலும் நம்மைப்போலல்ல
பர சொரூபமே இயேசு, பரனே அவன்".

ஜெகத்து இரக்ஷகரின் திரு அவதாரத்தைப் பற்றிய அருளும் பொருளும், சுவையும் இன்பமும் பொருந்திய அருமையான கீர்த்தனைகளடங்கிய இச் சிறு புஸ்தகம் பக்தி ஞானமார்க்கத்திலமைந்த இந்திய தமிழ் கிறிஸ்தவ திரளுக்கு மிக்க எழுப்புதலையும், சந்தோஷத்தையும் பிர்மானந்தத்தையும் உண்டு பண்ணுமாதலால் இதனைக் கருத்துடன் வாங்கிப் படித்து, கர்த்தாவைப் போற்றி மகிமைப்படுத்தும் ஆண்மாக்கள் நன்மையடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

பார்புகழும் இப்பரதகண்டமாகிய இவ்விந்தியாவில் பல சாஸ்திரங்களுடன் சங்கீத சாஸ்திரமும் சிறப்புற்றோங்கி விருத்தியடைந்து வருவதைக் கண்ணுறும் கிறிஸ்தவ நண்பர்கள் தங்கள் குடும்பங்களிலும் சபைகளிலும் இவ்வின்ப கீதங்களை உபயோகித்து வருவாராயின் ஆத்ம இரக்ஷண்யத்திற்கான சமாதானத்தையும் பரமாத்மாவின் பேரன்பையும் பெற்று, ஆனந்த பரவசமடைந்துய்வார்களென்பதற்கும் ஐயமில்லை.

இவ்வரிய கீர்த்தனைகளை மிக்க சிரத்தையுடன் இயற்றிய ஆக்கியோன் M. S. நடராஜ பாவலர் அவர்களுக்கு நண்பர்கள் அன்பு பாராட்டுவதுடன் அவர் எடுத்துக்கொண்ட சிரமத்தையுணர்ந்து, கால கிரமத்தில் பூரண அறிவும், சிறந்த ஞானமும் நல்வரமும் பெற்றோங்கி, திவ்ய ஊழியனாய் துலங்கி எம்பெருமானுக்குச் சாக்ஷியாய் விளங்கி நிற்க ஐயனை மன்றாடிக்கொள்ள மறவாதிருக்கும்படி அன்புடன் பிரார்த்திக்கின்றனம்.

பாகவதர் வேதநாயக சாஸ்திரியார்.

# ஜனனம்

## 1

### தெய்வத்தின் திருச் செயல்

"நமஸ்தே மாபிராணநாதா" என்ற வர்ணமெட்டு

இராகம்—இந்துஸ்தான் கல்யாணி ஏகதாளம்

பல்லவி

நினைக்க நினைக்கநெஞ்சம் நினைப்பாடுதே—நினை

அனுபல்லவி

கன உபகாரா கருணைக்குண உதாரா —நினை

சரணம்

தனதின்ப ஸ்தலம் விட்டு தக்கதூதர் துதியும் விட்டு
எனக்காகவல்லவோ நீர் இவ்வுலகம் ஏகினீர்
தினமும் இத்திருச் செயல் சிந்திக்கச் சிந்திக்கச் சிறிதோ
[—நினை

---

## 2

### இடையர் குழந்தையைக்கண்டு இரங்கிப்பாடுதல்

"ராகசுதாரஸே" என்ற வர்ணமெட்டு

இராகம்—மயூரத்வனி ஆதிதாளம்

பல்லவி

ராஜாதி ராஜனே நாண்மலர்ப்பாதனே
நாடியதென் இக்கோலம்—ராஜா

அனுபல்லவி

ஆசார மாகுமோ ஆகுடிலேகிட —ராஜாதி

### சரணங்கள்

1

வீசும் குளிர்பனி மேனிநடுக்கிட மேவிப்பிறந்ததென்?
யேசு நாயகமே எளியர் சகாயமே —ராஜாதி

2

காணிப்பொன்னும் இல்லையோ கந்தையிதும்மலையோ
[கர்த்தாதி கர்த்தனே
ஆணிமுத்தாடைகள் அடைவதசாத்யமோ! —ராஜாதி

---

## 3

சாஸ்திரிகள் பிள்ளையைக் கண்டு மகிழ்ந்து பாடுதல்.

"எவரெனீ" என்ற வர்ண மெட்டு

இராகம்—நாதசிந்தாமணி　　தாளம்—ஆதி

### பல்லவி

எவரிவர் எழில் பாலகனே
ஏழை மரியாளிடமே தோன்றிய —தேவ

### அனுபல்லவி

அவனி வருவாரென்ற அண்ணல்பெருமான் இவரோ!
அற்புத பாலகனாக தோன்றிய —தேவ

### சரணங்கள்

1

மன்னன் தவீதுகுல மன்னவனா யாண்டிட
மண்ணில் வருவாரென்று மாண்புபெற
அன்பன் எசாயா கூறும் ஐந்து நாமத்தோன் இவரோ
அம்பரம் ஆளும் அரசோ இவர்! —எவ

2

இத்தரையில் இஸ்ரவேல் ஏங்கித்தவியாது
ஏற்றமண வாளனய் எழும்பிடுவோர்
பெத்லகேம் ஊர்தனிலே பிறப்பார் என்றதும் இவரோ!
பேரருள் பெய்யும் பெம்மானே இவர்! —எவ

---

## 4

## ஆர்ப்பரி

"காமி சத்ய பாமா" என்ற வர்ண மெட்டு

இராகம்—கமாஸ் தாளம்—ஆதி

### பல்லவி

தேவ குமார அவதாரம் ஆர்ப்பரி—உன்னத
தேவ குமார அவதாரம் ஆர்ப்பரி
ஆர்ப்பரி
ஆர்ப்பரி
ஆர்ப்பரி—உன்னத —தேவ

### சரணங்கள்

1

நாவால் புகழ நம் நாட்களும் போதுமோ
ஆகா அதிசய நாதன்
நாதன்
நாதன்
நாதன்—உன்னத —தேவ

2

திக்கற்ற ஏழைகட்கு தெய்வம் துணை யென்பதை
தக்க முறையில் தாங்கினர்
தாங்கினர்
தாங்கினர்
தாங்கினர்—உன்னத —தேவ

3

பொல்லாத பாவிகட்கும் புண்ய ரட்சிப்பைச் செய்ய
நல்ல முறையில் தோன்றினர்
தோன்றினர்
தோன்றினர்
தோன்றினர்—உன்னத —தேவ

4

ரட்சிப்பின் மார்க்கமதை நானிலத்தில் புசட்ட
பெத்தலே யூரில் பிறந்தார்
பிறந்தார்
பிறந்தார்
பிறந்தார்—உன்னத —தேவ

---

## 5

## திருவடிவத் தாலாட்டு.

இராகம்—நீலாம்புரி

ரா ரா ரோ ரா ரோ ரா ரீ ரே ரோ ரா ரா ரோ
ரா ரா ரோ ரா ரோ ரா ரீ ரே ரோ ரா ரா ரோ

1

சந்திர சூரியரும் தம் ஒளியே மங்கி நிற்க
என்றனுக்கு வாய்த்த எழிலொளியே கண்வளராய்—ரா ரா

2

மாணிக்க முத்தே மரகதமே செம்பொன்னே
ஆணிமுத்தென் னனந்தமே அருந்துரையே கண்வளராய்-ராரா

3

மாட மாளிகையிருக்க கூட கோபுரமிருக்க
மாடடையும் கொட்டில் வந்த மன்னவனே கண்வளராய்—ரா

4

பொல்லாப் பிணி பிசாசு போவென்று விரட்டுதற்கு
வல்லமை புறப்படும் பொன் வாயழகா கண்வளராய்—ரா ரா

5

மன்னிக்க வேண்டு மென்று வருந்தி வரும் பாவிகள் மேல்
கண்ணோட்டம் செய்யுமென்றன் கண்ணழகா கண்வளராய் -ரா

6

வையக மயக்கம் விட்டு வந்தணுகும் மாந்தர்களை
கையடை கொடுத்தணைக்கும் கையழகா கண்வளராய்—ராரா

7

காணாமல் போன ஆட்டை கண்டுகொள்ள காசினியில்
நாணாமல் நடந்தலையும் நடையழகா கண்வளராய்—ராரா

---

## 6

## மனமே பரனை மறப்பாயோ

"புவினிதா சுடனே" என்ற வர்ணமெட்டு

இராகம்—ஸ்ரீரஞ்சனி. தாளம்—ஆதி

**பல்லவி**

மனமே பரனை மறப்பாயோ நீ
மண்ணிலவர் செய்த மகிமை நினை.

**அனுபல்லவி**

க்ஷணமும் அவர் தன்மை மறப்பாயோ
தன்னை யவர்க்கே தத்தம் செய்திடாயோ —மனமே

**சரணம்**

வான லோகன் மகிமை ராஜன்
ஞான சீலன் நம்பும்மனு வேலன்
ஈனருக்காக எழுமனுக் கோலன்
ஆணை மீறினோர்க் காக வந்தார் பாலன் —மனமே

# 7
# கிருஸ்துவின் தாழ்மை.

"அதிஷ்டம் வந்திட்டவுடன்" என்ற வர்ண மெட்டு

இராகம்—பியாக் தாளம்—ஆதி.

**கண்ணிகள்**

1

திரிலோகமும் நிறைந்த திரியேக தேவா
சிறிய கர்ப்பமாய் நின்ற தென்ன விநோதா?
அரிய பரம் பொருளே அற்புத மூலா
அடியேன் அறிந்திலேன் யான் எம் கிறிஸ்து பாலா —திரி

2

பரிசுத்தர் பரிசுத்தரென்று பரத்தில் ஓதும்
பக்தரை வாழ்த்தும் கரம் பங்கஜ மலர்ப்பாதம்
மரி வயிற்றில் மடக்கி மா பத்து மாதம்
வசித்தவிதம் கூறுதே வள்ளல் உனின் நேசம் —திரி

3

தாரகமீதிலுள்ள சகல ஜீவ ஜந்துக்கள்
சாமி உன்னையல்லாது ஜன்மம் எடுத்ததுண்டோ
ஆரண அனைவர்க்கும் அன்னையாய் நீ இருக்க
அடியாள் மரியாள் உன்றன் அன்னையாவது மென்ன? —திரி

## 8

# நான் என்ன பதில் செய்வேன்.

"செந்தூர் வேலாண்டி" என்ற வர்ண மெட்டு

இராகம்—சிந்து பைரவி | தாளம்—ஆதி

### பல்லவி

என்ன நான் செய்வேன்—இதற்குப் பதில்
என்ன நான் செய்வேன்
ஏழையென வந்தாய் சாமி —இதற்குப் பதில்

### அனுபல்லவி

அன்னை தந்தையாகிலும் அப்பனே உம்மைப்போலே
அன்பின் அதிகத்தினால் அடியரெமைக்காக்க
துன்பமடைய யெண்ணி துறப்பாரோ தமதின்பம் —என்

### சரணம்

பருவதம்போல்பொன்னைநான் படைத்தாலும் பதிலாமோ
பாரினில் தக்கபதில் பரனுமக்களிப்பது
பாவி எளியேன் என்னால் ஒருபோதும் இயலாது
பாத மலர் நிதம் பன்முறை தொழுவேன்
பாவம் அகற்றியென் இதயமே தருவேன் —என்

---

## 9

# பாலகன் தரிசனம்

"ஆண்டவன் தரிசனமே" என்ற வர்ண மெட்டு

இராகம்—இந்துஸ்தான் அசாவேரி | தாளம்—ஆதி

### பல்லவி

பாவம் பறக்கும் க்ஷணமே—பரன் ஜேசு
பாலகன் தரிசனமே

**சரணங்கள்**

1

தேவனின் ஆலயம் தாவியே சென்று
மேவும் அருள் பெற நின்று—பரன் ஜேசு —பாலகன்

2

பொருளை மறந்து அருளை நிறைந்து
இருதயக் கண்ணைத் திறந்து—பரன் ஜேசு —பாலகன்

3

கண்ணியம் எண்ணு புண்ணிய நாதன்
தன்னைப் பலியாக்கிய தியாகன்—பரன் ஜேசு —பாலகன்

4

உன்னதவாசன் கன்னியின் தாசன்
அன்னைபோல் அன்புகொண்ட நேசன்—பரன் ஜேசு—பாலகன்

5

எண்ணுக்கடங்கா எத்தனை பாவமும்
அண்ணலைக்காணவே நீங்கும்—பரன் ஜேசு —பாலகன்

---

## 10

## அதிசயக் கண்ணிகள்.

**(கிளிக்கண்ணிகள் போல்)**

1

தேவாதி தேவர்களின் திருத்துதி எற்கும் தெய்வம்
பாவிகள் வினையகற்ற—மனமே
பாரில் வந்தததிசயமே.

2

தந்தையின் வீடல்லவோ சத்திரம் யேசுவுக்கு
தந்ததோ இடம் இருக்க—மனமே
தாரணியில் அதிசயமே.

3

குமரன் பிறந்த செய்தி குவலய மட்டுமல்ல
அமரருலக மனைத்தும்—மனமே
ஆர்ப்பரித்த ததிசயமே.

4

படிமிசை படித்தவர் பலருமிருக்கையிலே
இடையர்க்குச்செய்தி முதல்—மனமே
ஈந்ததுவும் அதிசயமே.

5

ஞானிகள் மூவரும் நாதன் பிறப்பைக்காண
வான மீன் வழிகாட்ட—மனமே
வந்ததுவும் அதிசயமே.

6

கோனெனச் சதாபர கொலுவிலிருக்கும் தெய்வம்
ஆயினக் கொட்டிலிலே—மனமே
அமர்ந்ததும் அதிசயமே

---

## 11

# நவ வருடம்.

---

## பாவ அறிக்கை.

---

"எதி கெதிநாகு" என்ற வர்ண மெட்டு

இராகம்—அசாவேரி தாளம்—ஆதி

பல்லவி

மகிபா மன்னியும் வருந்திவரும் என்பாவம்
மகிபா மன்னியும்

### அனுபல்லவி

ததியிது ததியிதில் தயை புரியவருவாய்
தாவித்தாழ் பற்றினேன் தஞ்சம் நீர்தாஜனயா —மகிபா

### சரணங்கள்

1

மானிலத்தில் எதும்பொய் மயக்கமென்றெண்ணிடாதுதேவா
நானென்னும் மமதையே நாளும் எனை விடாது
வீணில் பிறர் இகழ்ந்து விளங்குவோரை வெறுத்து
தேனெனத்தீவினை சிந்தித்தேன் தெய்வமே —மகிபா

2

துயபரா நாவு உம்மை துதிக்கவல்லோ தந்தீர் தேவா
சுய நன்மைகள் கருதி துணிந்து பொய் மிகச்சொன்னேன்
அயலார் கெடுக்கும் வழி அநேகம் பேசித்திரிந்தேன்
தயவாய் இவை மன்னித்து தருவாய் அருள் தெய்வமே—
(மகிபா

3

எத்தனை பாவங்கள் இந்த ஆண்டில் செய்தேன்தேவா
அத்தனையும் சகிக்க ஆகிடுமோ என்னல்
இத்தலத்தில் கதி இல்லை வேறு எனக்கு
சித்தம் வைத்திரங்கியென் சிறுமை தீரும் தெய்வமே—மகிபா

## 12

## நவ வருட மன்றாட்டு

“எல்லோரையும் போலவே” என்ற வர்ண மெட்டு.

இராகம்—சுத்தசாவேரி தாளம்—ரூபகம்

### பல்லவி

நல்வரம் அருளும் நாதா நவ வருடமிதில் நீர் —நல்

அனுபல்லவி

வல்லபரா வரமருள்வாய்
வன் கொடும்பாவம் வந்தென்னை அணுகாது —நல்வரம்

சரணம்

சோதனை சதா ஜெயிக்க வேண்டும்
சுந்தரப்பதம் துதிக்க வேண்டும்
வேதம் என்னிதயத்தில் ஆணி
வேரூன்ற வேண்டும்
பூதலத்தில் உன்றன் புகழ் சொலவேண்டும்
பொல்லாப் பெதுவும் அகன்றிட வேண்டும்
சாதனையோடும்மில் சார்ந்திடவேண்டும்
நாதா உம்மை நாட ராஜா நல்கவேண்டும் —நல்வரம்

---

# பிரார்த்தனை.

---

## என்ன தாமதம்

---

"ரகு நந்தன" என்ற வர்ணமெட்டு.

இராகம்—சுத்ததேசி ஆதி தாளம்

பல்லவி

என்ன தாமதம் ஏழைக்கிரங்க
எனின் தாயகா யேசு நாயகா —என்ன

அனுபல்லவி

மன்னிப்பின் பிதாவே மகனல்லோ நான்
வழிவிட்டுப் போனேன் வந்து காரையா —என்ன

சரணங்கள்

1

கற்ற கல்வியும் கனபுகழும் உற்ருருபர்வும் ஊழியமும்
மற்றவையெவையும் மாசெல்வமும் மனமகிழ்வும் மகத்துவமும்
பெற்றும் பயனென்ன பேணிடில் ஜீவன்?
பேதையாஞெருவன் பெரிதுங்கெட்டேன் —என்ன

2

அச்சமறியேன் அழிவுதெரியேன் அனந்தக்ரூபா உமைநினையேன்
இச்சைகொண்டு பாவ இருள் நடந்தேன் இதயங்கெட்டு
[இழிவுகண்டேன்
உச்சித பரனே ஒளி ஞானம் தா
உலகில் உமக்கே ஊழியம் செய்வேன் —என்ன

## 14

## மகனென் துயரொரு நாளா

"மாதாபிதா நீ" என்ற வர்ணமெட்டு

இராகம்—இந்துஸ்தான் காப்பி ஆதிதாளம்

பல்லவி

வாவா சீயோன் மணுளா மகனென் துயர் ஒரு நாளா
ஈவாய் ஞான மென்ருற் கேளாய் பிறரிகழ்வது கேட்டுமாளாய்
பாவால் பணி செய்வேன் சீலா பழிச்சொல்தீரும்மலர்த்தாளா

தொகையறு

ஜீவாத்மா நீர் பெற்ற சேயன் தியங்கி நிற்கும் சிறுமைபாராய்
கோவேயெனின் குறைகண்டுகோபியாது கொண்டணைக்கவேவாராய்

பாட்டெடுப்பு

தேவாநின் திருச்செயல் சொலவா சிறியேன் ஜெபமுனக்குமலையா
மூவா யென்முகம் பார்ப்பதிலையா முதலே பதிலெனக்குச்சொலையா
—வாவா

2

வேறே கதியில்லை யென்றேனே ஆரிடம் முறையிடுவேனே
பாரும் பாடும் பக்தர்தேனே பாரில் யானிருப்பதும் வீணே

—வாவா

---

## 15

## எழுந்தாடுவேன்

"அபிமானமென்னெடு" என்ற வர்ண மெட்டு

இராகம்—விவர்த்தனி ஆதி தாளம்

### பல்லவி

தினமே உமை நான் பாடுவேன்
திருப்பதம் பணிந்தெழுந் தாடுவேன் —தினமே

### அனுபல்லவி

ஜன சமுகமுய்ய சாதகமாளுய்
சரணுகதிதா வந்தேன் மகளுய் —தினமே

### சரணங்கள்

1

மற்றவரி லன்பு வைத்தாலே யின்பு
மகிழுறுவோன் அடைவான் துன்பு
பற்றும் பணியென்றிவை பகர்ந்தாய் நற் பண்பு
பரம பிதாவே பாடுவேன் மாண்பு —தினமே

2

என்னை மீட்கவே இங்கு நீர் வந்தீர்
எத்தனை துயர்க ளெல்லா மடைந்தீர்
தன்னைப் பலியாக்கித் தரணியில் மாண்டீர்
தற்பராபராயித் தியாகம் யார் செய்வார்! —தினமே

## 16

# இந்தியா இளமைப் பருவந்தானே!

"தோடுடைய செவியன்" என்பதைப்போல்

இராகம்—காம்போதி | தாளம் ஆதி

### கண்ணிகள்

1

ஏதேது இந்தியாவுமையறிய இளமைப்பருவந்தானே
ஆதாரம் நீயே யெனத்தெரிந்தும் அகந்தைக் குணந்தானே
வாதே புரிந்து வேதம் உணரா மடமைத்தனந்தானே!
தாதாவே வுனின் தாள்கதி காட்டிட தாமதமேனே!

2

மாறுதலடையாள் மனதில்படி ம்ாசகல நினையாள்
ஆறுபுனல் குளித்தால் வினைபோமென அகமதிற்கொள்வாள்
தீரும் தீமையென்று காவடி தீயெடுத்தாடிடுவாள்
பாரும் பாருமையா இம்மட்டோ பைத்தியள்போல் நடிப்பாள்

3

தூரயிடமுள ஆலயம் தொழ தொடரும்நலமென்பாள்
ஆரவாரமுடன் அங்கு சென்று ஆயுளைக்கழிப்பாள்
பாரில் இவள் நிலை பரிதாபம் கொஞ்சம் பகர்ந்தேன் பரம அப்பா
நேரிலுமைக்காட்டி இவள் சீர்ப்பட நினைத்தருள் இப்போ

## 17

# வர்மமா என் மேல்

"மன வியாளஹிம்" என்ற வர்ண மெட்டு

இராகம்—நளினகாந்தி | ஆதி தாளம்

### பல்லவி

வல்லமைப் பிதா சுதா வேதா
வர்மமா என்மேல் தர்மமாகுமா —வல்

### அனுபல்லவி

எல்லையில் தயை இருப்பிடமே
எனக் கீந்தருள் இதிலே சொற்பமே —வல்

### சரணங்கள்

பெரும்பாடு ஸ்திரீயின் பிணி தீர்த்தையா
பிணமெழ வுயிர் அளித்தாய் துய்யா
குருசின் கள்வனைக் கொண்டதும் பொய்யா
குருடர்க்கு ஒளி தந்தாயே மெய்யாய்
திருவுருவே ஜெகத் குருவே
சித்தம் வை ஏழை சுத்தம் பெறவே —வல்

2

பேச நாவெழாதோன் மோசேயில்லையோ
பெரிய மந்தை மீட்கச் செய்தீரல்லவோ
வீசுவலைத் தொழில் சீஷர்க்கில்லையோ
வேதமோதுஞ்ஞானம் ஈந்தீரல்லவோ
நீசனெனக்கே நின்கதிவொன்றே
நிச்சயம் வாரும் என் கலி தீரும் —வல்

---

## 18
## ஆரிடம் செல்வேன்

"ராரவீதா" என்ற வர்ண மெட்டு

இராகம்—ஹிந்தோளவஸந்தம் தாளம்—ரூபகம்

### பல்லவி

ஆரிடம் செல்வேன் அடியேன் துயர் நீங்க துங்க —ஆரி

### அனுபல்லவி

சேரிடம் நீயே ஐய சேயன் ஜீவனுய்ய —ஆரி

சரணங்கள்

1

வா வென்றோதி வையக மேவிக் கூவி மிகவன்பாய்
பாவிகட்குப் பரமீயும் பரோபகாரா —ஆரி

2

மேய்ப்பனும் நீ மெய் ஜீவ மார்க்கனும் நீ மாராத
தாய்தந்தை நீ சர்வதிகாரா தஞ்சமும் நீ சாமி —ஆரி

---

## 19

## யார் சொலயியலும்

"கால ஹரண மியாலரா" என்ற வர்ண மெட்டு

இராகம்—சுத்தசாவேரி தாளம்—ரூபகம்

பல்லவி

நீர் செய் தயவை யார்சொல யியலும்
நேசா ராஜா —நீர்

அனுபல்லவி

பாருய்ய வந்த பரனின் பண்பு
கூறக் கூறக் கூடுதைய —நீர்

சரணங்கள்

1

அன்றாடக ஆகாரம் உடை அளித்தீர் நீக்கி யென் பீடை
ஒன்றும் விஷ ஜெந்து எனை ஒட்டாது செய்தீரே தயை
நன்றதாய் ராவும் பகலும் நாளுங் காத்தாய் சூழவிண் படை-நீர்

2

தந்திரப் பசாசின் கூட்டம் தாக்கிடா தயவு செய்தீர்
பந்தமாம் உலக ஆசை பற்றிடாப் பயிற்சி தந்தீர்
எந்த நேரமும் ஆத்மீக ஈடேற்றமே யெண்ணி வந்தீர் —நீர்

---

1A
5-30

## 20

# விடாதே விமலன் பாதம்

"ஷடானனு" என்ற வர்ண மெட்டு

இராகம்—கமாஸ் ஆதி தாளம்

### பல்லவி

விடாதே நீ விமலன் பாதம்
மடமை கொள் நெஞ்சே மரணப் போதும் —விடா

### அனுபல்லவி

கடல் சூழ்புவி கதியோ வுனக்கு
திடமாய்ப் பாரதன் தேவையெதற்கு? —விடா

### சரணங்கள்

1

பணம் வருமோ பாரும் வருமோ
பிணமாயுடலும் பிரிந்திடுமே!
கணக்குனையன்று கர்த்தன் கேட்பதுண்டு
க்ஷணமே திரும்பு சாஸ்பதம் கண்டு —விடா

2

நிலை தருவார் நீதி தருவார்
கலை தருவார் கவலை தீர்ப்பார்
மலைபோல் துயர் மாறிடச் செய்வார்
அலையாதே என்று அஞ்சல் கூறுவார் —விடா

## 21
## முத்தி செல்லும் வழி

"பித்தந் தெளிய" என்ற வர்ண மெட்டு

இராகம்—செஞ்சுருட்டி    தாளம்—ரூபகம்

**பல்லவி**

முத்தி செல்லும் வழி மூடியிருக்குது முன்னறிவீர்களே
சத்திய ஜீவிய சாவி கொண்டாலல்லோ
சாத்திய கதவும் திறக்கும் திறக்கும் —முத்தி

**சரணங்கள்**

**1**

உத்தம ஊழியமே மிகப் பெரிது உற்றவர்க்கு உதவு
தந்தஞ் செய்து தன்னைத் தாழ்த்தியக்கால்பெருந் தன்மை
(யிருக்குது
மெத்தவரும் இடுக்கண்யெதும் மேலிட்டால் மேன்மை
(கொடுக்குது
இத்தகை எதுக்களில்லா வொருவர்க்கு இன்பம் கிட்டுவதும்
[எது எது? —முத்தி

**2**

எந்த நேரமும் யேசுவைத்துதிக்க இதயமிஞ்சாதே
சொந்த அலுவலே சோறிடுமென்றெண்ணி வேதம் மறவாதே
வந்திடும் போயிடும் வாழ்க்கை சதமென வையகத்தி லிராதே
அந்தரங்க ஜெபம் ஆராதனைதவம் அல்லும் பகலும்கைக்
[கொள்ளல் விடாதே—முத்தி

## 22
## பரன் துதியே பாக்யம்

"ராமநன்னுபுரோவரா" என்ற வர்ண மெட்டு

இராகம்—ஹரிகாம்போதி    தாளம்—ரூபகம்

**பல்லவி**

மாபரன் துதிப்பதே மகிதல மகிமை —மா

### அனுபல்லவி

ஆபரணமல்லவோ அடியர் துதியவர்க்கு
சாபம் நீக்க சன்மார்க்கம் தூக்க—ரீ
தாரணியிலே உதித்த —மாபரன்

### சரணங்கள்

1

காயம் எதுகாறும் நிற்கும் கனவதுபோலே வெகு சொற்பம்
மாயமென்றெண்ணுவதே நுட்பம்—ரீ
மறையோனல்லாதெதுவும் அற்பம் —மாபரன்

2

பக்திகாட்டும் பாதைஈது பசாசின் கிரியையணுகாது
முத்திகிட்டும் முறையுமீது—ரீ
மூன்றுகாலத்திலுமிணையேது —மாபரன்

---

## 23

## ஓடு சாத்தான்

---

"நாதர்முடி மேலிருக்கும்" என்பது போல்

இராகம்—செஞ்சுருட்டி ஆதி தாளம்

### கண்ணிகள்

1

பேதையர் மனதில் வசி பெரிய சாத்தான்
பெண்மணி ஏவாளுடைய பிரியசாத்தன்
பாதகம்புரியும் பயங்கரச்சாத்தான்
பகவான் சேயெனைச்சேரா தோடுசாத்தான்
ஓடுசாத்தான் விழுந்தோடு சாத்தான்—உனின்
ஒழியிடந்தேடியே ஓடு சாத்தான்

2

வேதமதைப் பகைக்கும் வெறுமைச்சாத்தான்
மெய்யரைப் பொய்யராக்கியே மிரட்டுஞ் சாத்தான்
சூதுவாது குடிகொள் சுருட்டைச் சாத்தான்
ஜோதியடுத்தேன் வந்தால் சுடுமே சாத்தான்
சுடுமே சாத்தான் சுட்டால் கேடுதான் சாத்தான்—பின்னே
தூரயிடஞ் சென்றெங்கும் தொலைசாத்தான்

இராகம்—புன்னுகவராளி ஆதி தாளம்.

3

ஆசை யெனும் ரூபங் கொண்டு ஆட்டிடுஞ் சாத்தான்
அழுக்காறு போலும் வந்து அலைக்குஞ் சாத்தான்
யேசவும் பேசவும் பலர் யேவுஞ் சாத்தான்
எனக்குமவ்வித மெண்ணுதிரு சாத்தான்
இரு சாத்தான் யாரென அறி சாத்தான்—அந்த
ஏகனடியானென யெண்ணு சாத்தான்

4

காலம் கடப்போரையும் கலக்குஞ் சாத்தான்
கண்ணிவைத்தே நரகம் காட்டுஞ்சாத்தான்
வாலிபருள் வல்லமை வளர்க்குஞ் சாத்தான்
வலையிவனுக்குமென வந்திடாதே
வந்திடாதே பின்னுல் நொந்திடாதே—சாத்தான்
வம்சமழித்திடுவேன் வந்திடாதே

---

# அறுப்பின் பண்டிகை

---

"எதிகெதினுகு" என்ற வர்ண மெட்டு

இராகம்—அசாவேரி தாளங் ஆதி

பல்லவி

அருள்வீர் நினதாவி அறுப்பின் பண்டிகையின்று —அருள்

### அனுபல்லவி

தருணம் தருணமிதில் சரணம் சரணமையா
தயைக்கொரு சாகரா சகல சிருஷ்டிகரா —அருள்

### சரணங்கள்

1

சுபதினமிதைக்காண சுகங்கொடுத்தீரல்லோ தேவா
துதிதோத்திரமுமக்கே சொல்லுகிறோம் தாயபரா
தயவாய் அங்கீகரித்துத் தருவாய் ஏராள நன்மை
சஞ்சலம் நீக்கி பக்தி சார்புறச்செய்யுமையா —அருள்

2

இந்த வருடமதில் ஈந்தநின் ஈவு கட்காய் தேவா
எங்களால் இயன்றதை இதோவும் முன் படைக்கின்றோம்
அந்தரங்கத்தி லெமை அறியும் கர்த்தாதி கர்த்தா
ஆனந்தமாய்க் கொடுத்தோம் ஆசீர்வதியு மையா —அருள்

3

புது ஆவி புதுச் சிந்தை புதுப்பித்தெமையனுப்பும் தேவா
அதுயெம் இருதயத்தில் ஆணிவேர் கொண்டுவளர
நதியாம் நீர் ஜீவதண்ணீர் நாளும் வார்த்து வளர்க்க
முதிதாகி முதிதாகி முத்தியடைவோமையா —அருள்

---

## 25

"ஆண்டவன் தரிசனமே" என்ற வர்ணமெட்டு

இராகம்—இந்துஸ்தான் அசாவேரி தாளம் ஆதி

### பல்லவி

அறுப்பின் பண்டிகை தினமே —அப்பனுன் ஈவு
அறிவாரென்றுணர் மனமே

### அனுபல்லவி

பொருள்தனைத் தந்த புண்ணியன் தந்தை
தரும்படி கேட்பதென்ன விந்தை? —அப்பனுன் ஈவு

1

எண்ணுக்கடங்கா எத்தனே நன்மை
அண்ணல் உனக்களித்தார் உண்மை —அப்பனுன் ஈவு

2

உள்ள பொருளில் உயர்ந்தவை கொண்டு
உள்ளங் கனிந் தீந்ததைக்கண்டு —அப்பனுன் ஈவு

3

கட்டாய மல்ல இட்டமே நல்ல
மட்டில்லா நன்மை தரவல்ல —அப்பனுன் ஈவு

4

இருப்பது பொய்யே இறப்பது மெய்யே
பரத்தில் பொக்கிஷம் சேர்த்து வையே —அப்பனுன் ஈவு

---

## 26
# திருமண வாழ்த்து

---

இராகம்—அரிகாம்போதி தாளம்—ரூபகம்

"ராம நன்னு புரோவரா" என்ற வர்ண மெட்டு

பல்லவி

தேவனே அருளுவீர் தேடு மணவாளர்க்காசீர் —தேவ

அனுபல்லவி

ஜீவனும் சீர் ஞானமும் சிறந்த நின் திருவாமும்
காவலா கருணேகொண்டு (ரீ)
கனிவாயீவாய் மெய்காணும் திரமும் —தேவ

சரணங்கள்

1

மேட்டிற்கட்டும் வீட்டைப்போல விளங்கிட இம்மானுவேலே
காட்டுமுயர்பாட்டை சீல காசினி மீட்டும் செங்கோலே
நாட்ட தேட்டமே யுன்றன் மேலே (ரீ)
நாளும் தருவாய் மாமறை நூலே —தேவ

2

மங்களமதோங்கி வாழ மக்கட் பேரிவரைச் சூழ
துங்கனிவராயுள் நீள சோதனே ஜெயித்து மீழ
செங்கமல மலர் தாழ் மென்றாள (நீ)
சிந்தையை செழித்தவர் திகழ —தேவ

---

## 27

(கிளிக்கண்ணிகள் போல்)

1

தேவாதி தேவேயிந்த திருமணமதில் வாரும்
ஈவாய் இன்னருள் இவர்க்கே—திருவே
இலங்கிட இவர் வாழ்வினில்

2

காவா கருணேநாதா காணு மண அற்புதா
பாவேற்கும் பரம தாதா—திருவே
பந்தயத்தில் முந்திடயிவர்

3

இரு கண் பார்வையதனே எவரால் பிரிக்க ஆகும்
குருவேயிவர் சேர்த்திடும்—திருவே
கொள்ளுங்குண கிரியைகளில்

4

சந்ததம்............சார்ந்த............
கந்த மலர் மணம் போலே—திருவே
காசினியில் கமழ்ந்திடச் செய்

5

எக்காள சத்தங்கேட்டு எழுந்தெதிர் செல்லும் நல்ல
மக்களேப் பெற்றெடுக்க—திருவே
மகத்துவம் தா இவர்க்கே

---

நான்காவது கண்ணியில் மணமக்களுடைய நாமங்களை வைத்து பாடுக.

6

ஏழையுருக்கொள் ஈசா எழிலுறு பரவாசா
ஆழக்கடல் நடராஜா—திருவே
அன்புவைத் தாட் கொள் இவர் —தேவ

---

## 28
# கிறிஸ்து பெருமானின் பாடு மரணம்

---

## கேத்சமேன் தோட்டம்

சங்கராபரணம் ஆதி தாளம்

**பல்லவி**

மலர்க்கா ஏகுவோம் வாருங்களேன்—சீடர்

**அனுபல்லவி**

ஒலிவ மலையின் சாரலே இரவே —மலர்

**சரணங்கள்**

1

பதினொரு சீஷருமே பரிந்திரு பாகமாக
அதிலொரு மூவர் துணையேவரவே —மலர்

2

மரணத்துக் கேதுவான வலு துயர மடைந்தேன்
உறங்காது ஜெபித்திடுமே பரனே —மலர்

3

திகிலும் வியாகுலமும் திரண்டெனை நெருக்குது
அகன்று ஜெபித்து வருவேன் வருவேன் —மலர்

4

கல்லெறி தூரஞ்சென்று கடவுளினடியில் வீழ்ந்து
அல்லலகள எனவே டொலவே —மலர்

G. V. E.

## 29

(வியாழக்கிழமை இரவு ஆண்டவர் கேத்செமனே
தோட்டத்திலே அடைந்த அவஸ்தை)

---

"தேயிலைத்தோட்டத்திலே" என்ற வர்ண மெட்டு

இராகம்—செஞ்சுருட்டி　　　　　　ரூபக தாளம்

என்னவென்று சொல்லுவேன்—எந்தை
ஏற்ற சிரமங்கள் எட்டிலடங்குமோ
தன்னைப் பலியாக்கி—ஐயன்
சகித்தபாடெல்லாம் சாற்றயியலுமோ
வியாழனிரவு அன்று—இதய
வேதனை துவங்கி எருசலேம் விட்டு
தியாகனும் எம்பெருமான்—தன்னைச்
சீடர் தொடர்ந்திடச் செல்கிறார் காரிருள்
கேத்செமேன் தோட்டத்திற்கே—அங்கு
கிட்டிய வேதனை கேட்கத் துயரமே
பக்தருறைவிடமே—யேசு
பாவமாக்கப்பட பரனின் ஆணையே
பாவக் கொடுமையெல்லாம்—அவரைப்
பற்றிச் சூழ மெத்த பயங்கரம் கொண்டார்
ஆவி தளருகின்றார்—பாவ
அசுத்தமே தன்னைப் பற்ற இணங்காது
எத்தனைதரம் விழுவார்—தரையில்—பின்னும்
ஏங்கி ஏங்கிப் பாத்ரம் ஏறிட்டுப்பார்க்கவே
ரத்த வேர்வையுங் கொள்வார்—அன்று
ராவெல்லாம் தேவனை மன்றாடி ஜெபித்தார்
சித்தம் பெரிதென்றும்—தெய்வ—சொல்லிச்
சிந்தனை கலங்கித் தேம்பிப் புலம்புரார்
கத்தி அருவாள் கொண்டு—யூத

76973

கணம் அங்கு வரக்கண்டாரெம்பெருமான்
பாதகனும் யூதாஸ்—ஆண்டவர்
பங்கஜ முகத்தைப் பற்றி முத்தமிட்டான்
மேவியே கட்டினரே—கிறிஸ்தை
மேனிவாட அன்னாவிடம் இழுக்கிறார்
வஞ்சகர்கள் பின்னிட—வள்ளல்
வாட்டமுற்றுச் செல்லும் தோற்றத்தைப்பார்த்தவுன்
நெஞ்சமிளகலையோ—ஐயோ—மாசில்லா
நேசர்பின் சென்றங்கே நேர்வதைக்கண்ணுற —நெஞ்

---

## 30

வியாழன் பின்னிரவில், ஆண்டவர் அன்னா, காய்பா, என்ற பிரதான ஆசாரியர்களிடத்தில் பட்ட பாடுகள்.

"ஞான பண்டித மோதிலால்" என்ற வர்ண மெட்டு

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி

பல்லவி

ஐயோ எப்படிச் சகிப்பீர்—அற்பர் யூதரின்
அடிகளெப்படிப் பொறுப்பீர்

அனுபல்லவி

கையோர் கட்டுண்ணப்பட்டு
கயவன் அன்னாவின் முன்னின்று—கருணைக்கடலே
கன்னத்தறையும் பெற்றீரோ —ஐயோ

தொகையறா

கல் நெஞ்சனும்காய்பாவுமைக் காரணமின்றிக் கடுமரணம் விதித்தான்
கண்களைக் கட்டி மறைத்து கணக்கில் அடி அடித்தார்
கொல்லவே உறுதிகொண்ட கொடிய யூதப்போர் வீரர்
குட்டினர் கோமகன் தலையில் குருதி சிந்த

பாட்டெடுப்பு

தூஷண வார்த்தை பேசினர்—திருமுகத்தில்
துப்பித் தூயனை யேசினர் —ஐயோ

## 31

வெள்ளிக்கிழமை முற்பகலில், பிலாத்து ஆண்டவரை மரணக்கினைக்
குள்ளாகத் தீர்த்தபோது அவனுடைய அரண்மனையில்
யூதர்களிடத்தில் எம்பெருமான் பட்ட பாடுகள்.

---

"ஆணியாலறையுண்ட" என்பது போல்

இராகம்—சகானு தாளம்—சாப்பு

### பல்லவி

எத்தனை பாடுமக்கு எவரால் சகிக்க ஆகும்
இவையெல்லாம் என்னலல்லோ சாமி!

### அனுபல்லவி

வஸ்திரத்தைக் கழற்றி வாராலடித்த அடி
வள்ளல் முதுகில் செந்நீர் வழிந்தோடுதையையோ! —எத்

### சரணங்கள்

1

வீராறு பேர் கூடி விமலாவுமையிழுத்து
நேரல்லாத் தூணில் சேர்த்து நீதிக்கடலைக் கட்டி
கூருடைய எலும்பும் குண்டு ஈயமும் கொண்ட
வாரால் அடித்தால் தசை வாராதோ மேனி விட்டு —எத்

2

சிவந்த மேலங்கிவொன்றை திருமேனியதில் போர்த்து
இவனே கோமானென்றேசி இழிவாய் முள் முடி சூட்டி
தவமகன் கையில் மூங்கில் தடியே செங்கோலாய்த்தந்து
எவரும் பணிகவென்று இகழ்ந்தார் முழங்கால் நின்று —எத்

## 32

பிலாத்தரன்மனையிலிருந்து, கல்வாரிக்கு எருசலேம் வீதிகளின் வழியாய் யூதர்கள் ஆண்டவரை நடத்திச்செல்லும் சிலுவைப் பவனியின் காட்சி.

---

"பண்டித மோதிலால் நேரை" என்ற வர்ணமெட்டு.

இராகம் — இந்துஸ்தான் காப்பி ரூபகதாளம்.

### பல்லவி

சிலுவைப்பவனிசெல்லும் செல்வரைப்பாரும்
செல்வரைப் பாரும் — பின்னால் — கல்வாரி சேரும் — சிலுவை

### அனுபல்லவி

பலத்த பாரச்சிலுவை பரன்மைந்தன் தோளிலிட்டு
அலுத்த மேலில் அடித்தால் ஐயோ என்செய்வார்
ஐயோ என் செய்வார் — அப்பன் — மெய்யோடென் வுய்வார்
— சிலுவை

### சரணங்கள்

1

நூறு வீராதிபதியும் நூற்றுக்கணக்காய் ஜனமும்
ஏராளமாய்த்திரண்டு ஏகின்ற காட்சி
ஏகின்ற காட்சி... உமைச் சாகச்செய் சூட்சி — சிலுவை

### தொகையறு

அண்ணல் மேல் சாட்டிய அநியாய குற்றமதை
அகன்றதோர் பலகைதனில்வரைந்து அவர்கழுத்தில் மாட்டி
முன்னே சென்றோர் வீரன் முற்றிலும் உறத்துக் கூவி
முழுப் பொய்தனை பலரும் கேட்கச் சொன்னான்

### பாட்டெடுப்பு

பின்முன் ஜன நெருக்கம் பீரிடும் ரத்தமயக்கம்
கந்நெஞ்சரடி தாங்காது கடிதினில் சாய்ந்தார்
கடிதினில் சாய்ந்தார் — சுடு — தரையினில் வீழ்ந்தார் — சிலுவை

## 33

பாரச்சிலுவையைத் தூக்கி நடக்கயியலாது பரமன் பட்ட பாடுகளையெல்லாம் பின்தொடர்ந்து பார்த்துக்கொண்டு சென்றபெண்கள் மனங்கசிந்து, கண்களில் நீர் ததும்ப புலம்புதல்

"அநாதை நான்" என்ற வர்ண மெட்டு.

இராகம்—முகாரி சாப்பு தாளம்

**பல்லவி**

என்ன செய்தீர் எந்தை —என்ன

**அனுபல்லவி**

மின்னல் ஒளி முகத்தில் செந்நீர்வடிய —என்ன

**சரணங்கள்**

1

ஐயாயிரம் ஜனங்கள் அன்று போஷித்தீர் ஐயா
துய்யாயிது குற்றமோ துயரமடைய —என்ன

2

செத்தபிணமதற்கு ஜீவன் கொடுத்தீர் ஐயா
எத்தனை தீமையிது இழக்க நின் ஜீவன் —என்ன

3

பொதுஜன உபகாரி புண்யனே பவப்பரிகாரி
கதியிதுவோவுமக்கு கால வித்யாசம் —என்ன

---

## 34

கல்வாரியில் சிலுவையிலறையுண்டு அச்சிலுவையிலே தொங்குகிற கிறிஸ்துவின் தோற்ற விளக்கம்.

"முத்தியளிக்கும் தில்லை" என்பது போல்

இராகம்—நாதநாமக்கிரியை தாளம்—ஆதி

**கண்ணிகள்**

1

எண்டிசையோருங் கண்டு எற்றுப்பணியவென்று
தொண்டன் யேசு குருசில் தொங்குகின்றாரே
சென்றங்கே வாரீரோ—கல்வாரியே—நின்றவர் பாரீரோ!

2

பண்டு நாள் செய்தபாவம் பற்றித்தொடர்ந்த சாபம்
விண்டிடச் செய்தீபம் மேலே தோணுதன்றோ
மண்டல மாந்தரே—ஜெய சின்னம்—ஒன்றேயென்றறிவீரே

3

யூதரின் ராஜனென உயர்திரி பாஷைகளில்
வேதன் பெயரெழுதி வைத்தார் சிலுவைமேலே
நாதனடியர் கண்டார்—திருவசன—பேதம்இல்லாதும்
[கொண்டார்

4

முனிவர் மோசே உயர்த்தும் முழுவெண்கலப்பாம்பிது
கனிந்த இதயத்தோடு கண்ணோக்கிப்பார்த்திடும்
மனிதன் பிழைப்பானே—மற்றயெவனும்—இனிதுயிர்
(இழப்பானே

---

## 35

இரக்ஷாபெருமானைச் சிலுவையிலறைந்து அச்சிலுவையைத் தூக்கி குழியில் நாட்டிய மத்தியான வேளையிலும், அன்று பிற்பகல் மூன்றுமணியானதும் கிறிஸ்து தன் ஜீவனை விட அந்த நேரத்திலும் நடந்த சம்பவங்கள்.

"மார்க்கத்தில் கண்ட கனி" என்ற வர்ண மெட்டு

இராகம்—அடாணு தாளம்—ரூபகம்

**கண்ணிகள்**

1

ஆண்டவரைச் சிலுவை அறை நேரம் அந்த காரமே—இந்த
அகிலமுழுதும் ஆட்கொண்டதென்றால் அப்பன்மகிமைஎன்?

2

தேவ ஆலயத்தின் திரை இரண்டாக சீக்கிரம் கிழிந்த —அந்த
செய்திமட்டுமல்ல ஜெகமே அதிர்ந்தால் செப்பிடுவேனே!

3

கன்மலே பிளக்க கல்லறை திறக்க கர்த்தரின் ஆணே—அங்கு
காலங் கடந்தவர் கடிதிலெழுந்து கண்டனர் மகிமை

---

## 36

பூமியெங்கும் அந்தகாரமானபோது அநேக யூதர்கள் பயந்து பட்டணத்திற்குள் ஓடி விட்டார்கள். அச்சமயத்தில் யேசுவின் தாயாராகிய மரியாள் ஆண்டவரிடத்தில் பக்தி கொண்ட சில ஸ்திரீகளோடும் அன்பன் யோவானேடும் அங்கு வந்து சிலுவையினடியில் வீழ்ந்து புலம்புகின்றாள்.

---

"ஆதிபராபரனின் சுதனே" என்ற வர்ண மெட்டு

இராகம்—ஆகிரி சாப்பு—தாளம்

கண்ணிகள்

1

பாரில் யானெருவளே பாக்கியம் பெற்றேனென மகனே--இந்த
பாவி மகிழ்ந்தேனே பரதவிக்க விட்டாய் மகனே
ஓர் பத்து மாதமாய் உன்னேச்சுமந்து பெற்றேன் மகனே—
(இப்போ
உருகுதே யென்னுள்ளம் உலகில் இருப்பேனே மகனே

2

விலையுயர் பரிமளம் பூசிய பாதமிதில் மகனே—இப்போ
வேதனே தர ரத்தம் வேளியேறுதையயோ மகனே
உயிரற்ற பிணமதும் உயிர்பெறத்தொட்டகையோ மகனே—
(இப்போ
ஊடுருவிச் செல்லுதே உன் கையிலறை ஆணி மகனே

3

கிருபைகொள் உயர் கோனய் கிரீடம் அணி சிரசில் மகனே—
[இப்போ

328

பருத்தமுள் முடி வைத்தார் பரிதாபம் கொடுக்குதே மகனே
மறுரூபமாகியவுன் மதிவெல்லும் மேனியெல்லாம் மகனே—
(இப்போ
குருதிவடிய யிந்தக் கோலமடையலாமோ மகனே

## 37

கல்வாரியின் பக்கத்திலிருந்த அரிமத்தியாவூர் யோசேப்பின் தோட்டத்திற்கு அந்த யோசேப்பும் ஆண்டவரில் பக்தி கொண்ட மேற்சொல்லிய ஸ்திரீகளும் சேர்ந்து அவரின் சரீரத்தை சாயங்கால நேரத்தில் எடுத்துச் சென்றார்கள். அங்கு மகதலேனா மரியாள் ஆண்டவரின் சரீரத்தில் காணப்பட்ட காயங்களைக்கண்டு துக்க சாகரத்துள் மூழ்கி அழுது புலம்புகிறாள்.

"என் சிலுவை எடுத்து" என்ற வர்ண மெட்டு.

இராகம்—முகாரி சாப்பு—தாளம்

### பல்லவி

என்ன கொடுமைக் கண்காக்ஷி—எனது குரு
இக்கதி அடையலாச்சு.

### அனுபல்லவி

பின்னிய தலைமயிர் பிரியுதில்லையே ஐயோ
பீரிட்ட ரத்தமெல்லாம் பெரிதும் படிந்ததையோ —என்

### சரணங்கள்

1

முட்கள் எத்தனை தலையில் மோக்ஷ நாயகா
முறிந்து நிற்கின்றன ஐயோ!
பக்கவிலாவில் ஈட்டி பாய்ந்த காயத்தைக்காண
பதரித் துடிக்கின்றதே பாவிவுள்ளமிப்போது —என்

2

எப்படி அடித்தனரோ முதுகின் தோலே
இப்படி உரிந்திட்டதே!
செப்பயியலுமோ சிறியர் கொடூரவதை
கைப்புறங்கள் விலாவில் காயம் காணப்பயமே —என்

38

# உயிர்த்தெழுதல்.

"ரமின்சுவாரெவருரா" என்ற வர்ணமெட்டு

இராகம்—சுபோஷணி திஸ்ர ஏகதாளம்.

பல்லவி

மகிபரன் எழுந்தார் மனமகிழ் கொண்டாடுவோம்

அனுபல்லவி

சகித்தார் மரணப்பாடு உயிர்த்தேகினார் தன் வீடு —மகி

சரணங்கள்

1

வானவர் மலர் மழை பொழிய
ஈன சாத்தானுமே ஒழிய
மானிடரிலன்பு தெளிய
தானமும் தவமும் நிறைய —மகி

2

தேவன் காட்டிய மார்க்கமே
போவதே தெய்வ நோக்கமோ
ஆவி அனல் சிலாக்யமே
மேவிடுமவர் பாக்யமோ —மகி

ஓ. 49
1733



## 39

## உயிர்த்தெழுந்த காட்சி,

சகானா | ஆதி தாளம்.

### பல்லவி

ஐயன் கிறிஸ்தரசனெழுந்தார்—வான்
ஆஞ்சுகள் துதித்தக மகிழ்ந்தார் — நமதையன்

### அனுபல்லவி

பொய்யா மலகை சிரமரிந்தார்—இருள்
புவன மதிரவகை புரிந்தார் — நமதையன்

### சரணங்கள்

1

பூமியதிர்ந்துமே தள்ளாட—நின்ற
போர்வீரர் விழுந்து மண்மூட
சாமிசடல மூயிர்த்தரட—திருச்
சன்மனசுகள் வந்து கூட — நமதையன்

2

கல்லறை மூடியவாறிருக்க—யேசு
கர்த்த னுடலும் வெளிப் பறக்க
வெள்ளாடை முடிச்சுடனிருக்க—தலை
வேஷ்டியோ சுருட்டி வைத்திருக்க — நமதையன்

3

தூதன் மூடின கல்லைப் பேர்க்க—அங்கு
துய்யனில்லாமை தனைப்பார்க்க
மாதா வரவை எதிர்நோக்க—உயர்
மங்கள மொழி ப்[illegible]தேற்க — நமதையன்

4

மகதலா ளழுங்கண்ணீர் துடைக்க—திரள்
மாதர் அடியில் துதி படைக்க
மிகை கொடு சீடர்களுக் குரைக்க—அவர்
மெய்யென நம்பிட[illegible]திகைக்க —நமதையன்

Pasumalai. } G. V. Ezekiel,
Music Master.

76973